**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

**06 மாச்சு 2019 நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் 2019இன் 01ஆம் இலக்கம்**

## வைப்புகள்

2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டது

1. வைப்புகள் மீதான 2016இன் 03ஆம் இலக்க பணிப்புரைகளை நீக்குதல்

1.1 வைப்புகள் மீதான 2016இன் 03ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தின் பணிப்புரைகள் இத்தால் நீக்கப்படுகின்றது.

2. தவணை மற்றும் சேமிப்பு வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் மீதான மட்டுப்பாடுகள்

2.1 ஒவ்வொரு உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனியும்:

i. வைப்புகளை பிணையஉறுதி வைப்புகளாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

ii. பராயமடையாதவர்களிடமிருந்து ஏதேனும் வைப்பினை ஏற்றுக்கொள்ளல் ஆகாது.

3. உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள் தேறிய கடன் வழங்குநராக இருக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வாடிக்கையாளரும் தேறிய கடன் பெறுநராக இருக்கவேண்டும்

3.1 உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள், தேறிய கடன் வழங்குநர் ஒருவரின் நிலையில் எப்போதுமிருத்தல் வேண்டும். உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி ஒன்றின் மொத்த வைப்புகள் அதன் மொத்த செயலாற்றுகின்ற கடன்களினதும் முற்பணங்களினதும் அறுபது சதவீதத்தினைவிட (60%) மேற்பட்டிருத்தலாகாது.

3.2 உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி ஒன்றின் வாடிக்கையாளர் ஒருவர் உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடனொன்றினை முழுமையாக மீள்கொடுப்பனவு செய்துள்ளவிடத்து, அத்தகைய உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனியானது கடன் மீள் கொடுப்பனவு நிறைவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றிற்கு பிணையஉறுதி வைப்பினை பிடித்துவைத்தலாகாது.

4. ஊக்குவிப்புத் திட்டங்களை தடைசெய்தல்

4.1 உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனி எதுவும் வைப்புகளை பரிந்து கோருவதற்கு ஏதேனும் ஊக்குவிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தலாகாது.

5. பொருள் விளக்கம்

5.1 *பிணையஉறுதி வைப்பு* என்பது அத்தகைய கடன் பெறுநருக்கு வழங்கப்பட்ட கடன் வழங்கல் வசதியொன்றிற்கெதிராக கடன் பெறுநர் ஒருவரிடமிருந்து பிணையஉறுதியொன்றாக பெற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்பு என்று பொருளாகும்.

5.2 *பராயமடையாதவர்* என்பது பராயமடையும் வயது கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 66) மற்றும் அதற்கு செய்யப்பட்ட ஏதேனும் திருத்தங்களின் கருத்தின்படி சட்ட ரீதியான பராயமடைந்தோர் வயதை அடையாத ஒரு ஆள் என்று பொருளாகும்.

5.3 *ஊக்குவிப்புத் திட்டம்* என்பது வட்டி மூலமாகவன்றி வைப்பாளர்கள் மீது நாணய அல்லது பொருள் நன்மையொன்றினை வழங்குவதற்கான ஒரு ஏற்பாடு என்று பொருளாகும்.

**இந்திரஜித் குமாரசுவாமி**
**நாணயச் சபையின் தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**